# சமூக நேசம்

# எங்களின் சுவாசம்

கவியரங்கக் கவிதைத் தொகுப்பு

02

- படர்க்கைகள் இணையம் -
- கலை இலக்கிய ஒன்றியம் -
சம்மாந்துறை.

# "சமூக நேசம் எங்களின் சுவாசம்"

## கவியரங்கக் கவிதைத் தொகுப்பு

- படர்க்கைகள் இணையம் -
- கலை இலக்கிய ஒன்றியம் -
சம்மாந்துறை.

படர்க்கைகள் இணையம், கலை இலக்கிய ஒன்றியம்
இணைந்து நடாத்தும்

# கவியரங்கமும், உரை அரங்கமும்

## சமூக நேசம் எங்கள் சுவாசம்

2014 ஏப்ரல் 13 ஞாயிறு பி.ப. 04.00 மணி

சம்மாந்துறை தாறுஸ்ஸலாம் ம.வி. கேட்போர் கூடம்

தலைமை: **வித்தியாகீர்த்தி இறையருட் கவிஞர் ஏ. இப்றாஹீம்**

## அங்கம் 1 - கவி அரங்கம்

முன்னிலை: **சட்டத்தரணி கே.எஸ். அப்துல் சலீம்** BA, LLB
தலைவர், பொதுஜன சேவா மன்றம்

கவிதை உரைப்போர்:
**கலாபூசணம் கலைமணி ஏ.சீ. இஸ்மாலெப்பை**
**கலாபூசணம் சம்மாந்துறை அஸீஸ்**
**சாமசிறீ மஸூறா சுஹூர்டீன்**
**கவிஞர் எஸ்.எல்.எம். இஸ்மாயில்**

இசைப் பாடல்:
**ஏ.எல்.ஏ ரஸூல்** (ஏகேஆர்.அஸீஸ்)

## அங்கம் 2 - உரை அரங்கம்

முன்னிலை: **ஏ.சீ.எம். இஸ்மாயில்**
அதிபர், தாறுஸ்ஸலாம் மவி. சம்மாந்துறை.

விசேட உரை:
சாஹித்திய விருது பெற்ற
**கலாபூசணம் எஸ்.எல்.எம். ஹனிபா** (வாழைச்சேனை)
முன்னாள் மாகாணசபை உறுப்பினர், வ.கி.மா.சபை

ஒருங்கிணைப்பு:
கவிஞர் **இஸ்மா பரீட்** - படர்க்கைகள் இணையம்
பத்திரிகையாளர் **எம்.ஐ.பி.பௌஸூதீன்** - கலை இலக்கிய ஒன்றியம்

03

# நேசங்களை நுகருமுன்...

*வீதியோரங்களில் நிழற் குடை விரிக்க*
*வேருக்கு நீர் தேடி நிற்கும் மரங்களின் வாசகம்*
*வீதிக்கு வாசம் ஊருக்கு சுவாசம்.*

*எங்களின்*
*கவியரங்க வாசகம்-*
***"சமூக நேசம் எங்கள் சுவாசம்".***
*மரங்கள் சுவாசித்த காற்றை*
*மனிதர்கள் சுவாசிக்க வழங்குவது*
*மரங்களின் சமூக நேசம்.*

*சமூக நேசம் சிந்தனையாளனின் சுவாசம்.*
*சமாதானத்தின் நுழை வாசல்*
*புரிந்துணர்வு பூக்களின் வாசம்*

*எங்கள் சுவாசம் காற்று எமக்கு வழங்கும் கடன்*
*காற்று கடனை நிறுத்திவிட்டால் நாம்*
*மையத்து என்ற மரணப் பெயருடன்*
*மண்ணில் சங்கமித்து விடுவோம்.*

*சமூக நேசம் எங்கள் சுவாசமானால் - நம்*
*உள்ளங்கள் உயரும் - அதில்*
*நல்ல எண்ணங்கள் புலரும்*
*சமூக சிந்தனை மலரும் - அதில்*
*மனித நேயங்கள் மிளிர்ந்து*
*சமூக நலனுணர்வுகள் வளரும்*

*சமூக நேசத்தை சுவாசித்தவர்கள்*
*சமூகத் தொண்டர்களாக தலைவர்களாக*
*இறந்தாலும் இறவா மனிதர்களாக - எமது*
*உள்ளங்களில் உலாவருவார்கள்.*
*மனங்களில் மணம் கமள - எமது*
*நினைவு நாற்காலிகளில் அமர்ந்திருக்கும் - இவர்கள்*
*சமூக நேசங்களை சுவாசித்தவர்கள் - நாமும்*
*சமூக நேசங்களை சுவாசிப்போம்!*

**-- இஸ்மா பரீட் --**
படர்க்கைகள் இணையம்
238, பாஸி ஆலிம் ஒழுங்கை, சம்மாந்துறை.

## கவி அரங்கில் முன்னிலை வகித்த
## **சட்டத்தரணி கே.எல்.அப்துல் சலீம்** BA, LLB
அவர்களின் செய்தி

*சமூக நேசம் எங்கள் சுவாசம்*
*இந்த மகுடம் முத்தானது, சத்தானது, எதற்கும் இதுவே வித்தானது.*

*எம் சமூகம் இழந்து விட்டவை ஏராளம். - அவற்றில்*
*நாம் மீளக் கண்டு பிடிக்காதவை தாராளம்.*
*அதில் சமூக நேசம் என்பது முதலானதாகும்.*
*கல்வியும் அதில் முக்கியமானதே!*

*நேசம் இல்லா வாழ்வு ஈரம் இல்லா சோறு போன்றது.*
*நேசம் இல்லா சமூகம் சாரம் இல்லா பழச்சாறு போன்றது.*
*சமூக நேசம் இல்லாத நாம்........?*

*இப்படியான ஒரு மகுடத்தில் கவி அரங்கும் உரை அரங்கும்*
*இதுகாலத்தின் கட்டாய தேவை. - மட்டுமன்றி*
*இப்படியான சமூகசார் இலக்கிய நிகழ்வுகள் எம்மூரில்*
*இல்லாமலாகி பல்லாண்டுகள் கடந்து விட்ட நிலையில்*
*இப்படியாக ஒரே கல்லில் இரண்டு மாங்காய்கள்.*
*அகம் மகிழ்கின்றேன்.*
*களம் சமைத்த உள்ளங்களுக்கு பாராட்டுதல் கூறுகின்றேன்.- எனக்குமதில்*
*இடம் தந்தமைக்கு நன்றி கூறுகின்றேன்.*
*எல்லாப்புகழும் வல்ல நாயனுக்கே!*

*தொடர்க இப்பணி!*
*தொடுக சிகரம்!*
*நன்றி.*

அன்புடன் **கே.எல்.அப்துல் சலீம்**

கவி அரங்கின் கனிவான தலைவர்

***வித்தியாகீர்த்தி இறையருள் கவிஞர் ஏ.இப்றாகீம்***

*அவர்களின்*

# நேசத்தின் நுழை வாயில்

*நான் என்னை நேசிக்கிறேன்.*
*நான் உன்னையும் நேசிக்கிறேன்.*
*நான் அவனையும் நேசிக்கிறேன். - மொத்தத்தில்*
*நான் தன்மை முன்னிலை படர்க்கையுடன்*
*அஃறிணைகளையும் நேசிக்கிறேன்.*
*நான் மட்டும் நலமாக வாழ முடியாது.*
*எனவேதான்*
*நானும் நீயும் அவளும் சேர்ந்த சாம்பாரான*
*சமூகமானோம்!*
*நேசக் காற்று வீசட்டும் சமூகத்திற்கு*
*நாசம் தரும் புயலாக அல்ல தென்றலாக!*

*இன்றைய இக் கவியரங்கின் நிழலில்*
*இனிய கவி சாற்ற வந்திருக்கும்*
*தக்ககவிஞர்காள்! தகையோர்காள்!*
*மிக்க கனிவுடனே மேலான சலாமாக*
*அஸ்ஸலாமு அலைக்கும் என வாழ்த்தி*
*ஆரம்பம் செய்கின்றேன்.*

*தலைமைப் பதவிக்குத் தானெங்கும் போட்டி*
*இலையிங்கு அப் போட்டி இழுத்தென்னை*
*தலைமைப் பொறுப்பினை தந்தார்கள் மாட்டினேன்*
*தலை சாய்த்து தொடங்க வந்தேனிது*
*நேசம் படுத்திய பாடு! - இந்தச் சமூக*
*நேசம் படுத்திய பாடு!*

நாக்கின் சுவையரும்புகள்
போக்கின் உணர்வுகளை
நாக்கறியுமோ நல்ல சுவை
உப்பென்ன புளியென்ன
உவர்ப்பென்ன கசப்பென்ன
இனிப்பென்ன உறைப்பென்ன
எல்லாமே ஒன்றுதான்
இல்லாதபோது சுவையரும்புகள்.

இப்படித்தான் இன்றைய மனிதம்...
எப்படித்தான் வாழ்ந்தாலும்
ஏங்கும் இதயம் இனிமைதேடி
அழகியல் ரசனைகள் அருகிப் போனதால்
கலை நிகழ்வுகள் ஒன்றுகூடல்கள் யாவும்
கலைந்து போகும் இக்கால வேளையிலே
கலையார்வமிக்க கவி ஒரு புதிய வெளிச்சம்!
இலக்கிய இதயம் எங்கள் பௌஸ்ீன்
இந்நிகழ்வின் அடிநாதமென்பேன்
இவர் நேசமே இப்போதைய சுவாசம்!

நான் விசுவாசிக்கிறேன்
வல்ல றஹ்மானை - அவன் தூதரை
நான் சுவாசிக்கிறேன் அவன் ஏவல்களை
என் வெளிச் சுவாசம் விலக்கல்கள்
இதுவே இங்குளோர் சுவாசமும் கூட!

முன்னொரு காலத்தில் மனிதர்களிடை
அன்பு பாசம் பரிவு இரக்கம் நேசம்
நன்றான புரிந்துணர்வு விட்டுக் கொடுத்தல்
எல்லாம் இழையோடி கூட்டாட்சி செய்தன!
நவீன உலகை ஆட்டிப் படைக்கும் ஆடம்பரம்
நவீனமாகவே போட்டி பொறாமை விதைத்திட
கவலையுடன் வலை போட்டுத் தேடுகிறோம்
அவதானமாய் அன்றிருந்த பண்புகள்தனை.

உறவு முறைக்குள் முளைத்திடும் நேசம்
பிறக்கும் பிள்ளை தாய் தந்தை
கணவன் மனைவி அக்கா தங்கை
அண்ணன் தம்பி பெரியம்மா பெரியப்பா
நண்பர் உறவினர் எல்லோரும் இப்போ
நேசத்தை தொலைத்த அகதிகள்
நேசம் முளைத்திடா சகதியில் சிக்கி
நாசத்தை நாடி நிற்கும் நீசர்களாய் இன்று!

இதுவே எங்கள் கோசம்!
**"சமூக நேசம் எங்கள் சுவாசம்!"**
இம்மகுடத்தில் இனிய கவியாத்து
இங்கு வந்திருக்கம் கவிஞர் நால்வர்
எங்கள் மூத்த கவி ஏ.சீ. இஸ்மாலெப்பை
எங்களுக்களித்தார் அத்தனையும் முத்துக்கள்.
சில்லறைக் கடையிலிருந்து
சீர் கவி கொண்டு வந்தார்
சம்மாந்துறை அசீஸ்!
ஊடகத்துறையிலும்
நாடகம் சிறுகதை கவிதையென
நாடும் நங்கை மசூறா சுஹுர்டீன்.
சாடும் பெயரோ சாமஸ்ரீ.
இளம் கவிஞர் இஸ்மாயில்
இந்தக் குளத்தில் ஒரு புது மலர்.
சுவையான சிற்றுண்டிக்கு
சுவை சேர்க்கும் அஜினோ மோட்டோபோல்
இடையிடையே யிங்கே இசைத் தேன் சொரிவார்
இயற்றிய பாடல்களால் இங்குள்ள ஏகேயார்
அஸீஸ்.
உள்ளத்தில் எழுந்த உணர்வுகளை
உள்ளபடி கவிதை தைத்து வந்துள்ள
கவிஞர்காள்!
வெள்ளமாய் பாயட்டும் உங்கள் கவி
உள்ளங்கள் மலரட்டும்!

## கலாபூசணம் கலைமணி
## ஏ.ஸீ. இஸ்மாலெப்பை

சமுகநேசம் எங்களின் சுவாசம்
சந்தோசம் மிக்கது இச் சகவாசம்
சமுகம், நேசம், சுவாசம் என்பன
தலைப்பில் மிளிரும் தார்ப்பரியங்கள்
சுவாசம் என்பது மூச்சைக் குறிப்பது
மூச்சு உண்மையில் உயிரைக் குறிக்கும்
உயிரே சமுகநேயம் என்பதில்
உண்மைக்குப் புறம்பு எதுவும் இல்லை.

சாகரம் சூழுலகின் சக்கரம் சுழல்வது
சமுகநேயத்தின் மையத்தை நோக்கியே
கற்பது கற்றுக் கொடுப்பது என்பது
காரியாலயங்களில் உண்மைக்குழைப்பது
உற்பத்தி, விற்பனை, சேகரம் என்பது
உதவாமற் போனதை திருத்திக் கொடுப்பது
வாகனங்களில் ஏறித் தூரம் கடப்பது
விவசாயம், பெரு, சிறுதோட்டங்கள் செய்வது
கடல், குளம், நீர்நிலை மீன்கள் பிடிப்பது
கடல் வானவீதிகளில் கப்பல்கள் ஓட்டுவது
கைத்தொழில், குடிசைக் கைத்தொழில் செய்வது

கொத்தனார், ஓடாவி வேலைகள் செய்வது
உணவகம், விடுதிகள், தேனீர்ச்சாலைகள் அமைப்பது
உற்பத்தி செய்திடும் ஆலைகள் அமைப்பது
அப்பங்கள், பிட்டு, பலகாரங்கள் சுடுவது
ஆடைகள் தைப்பது, சீலைகள் நெய்வது
மாடாடு கோழிகள் பண்ணையில் வளர்ப்பது
பால், தயிர், நெய்களும் பண்ணையில் செய்வது

இப்படிஆயிரம் முயற்சிகள் நடப்பது
எல்லாம் சமூகத்தின் நேசம் கருதியே!

சமூகம் என்பதை மனிதமாய்க் கருதினால்
சமூகநேயம் மனிதநேயம் ஆகும்
மனிதநேயம் கருதிச் சேவைசெய்ய
மக்களுள்ளம் வென்றெடுத்துத் தலைவராகி
கட்டிடங்கள் கல்விபெற பள்ளிக்கூடம்
களைசொட்டும் இடமாக இடங்களாக்கல்
பாதையோடு பாசனத்துக்கான வேலை
பல்துறையில் அபிவிருத்திப் பணிகள் செய்தல்
கேட்டறிந்து மக்கள் குறைபோக்குவித்தல்
கேட்காமல் பொதுக்குறைகள் நீக்கிவைத்தல்
அத்தனையும் சமூகத்தின் நேயத்துக்காய்
அரவணைத்துச் செய்து செல்வார் நற்தலைவர்!

மாறாக
பதவிபெற கதிரைக்குச் சண்டையிட்டு
பலகோடி ரூபாக்கள் விரயம் செய்து
பெறுகின்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி
பெருநிதியம் சேர்ப்பதற்கு ஆசைவைத்தால்
தலைவருக்கும் மக்களுக்கும் இடையில் நேசம்
தலைதெறித்து ஓடிவிடும் காணும் உண்மை.

ஐந்திற்கு வாங்கியதை கலப்படத்தால்
ஐம்பதுக்கு விற்றுஅதில் கொள்ளைலாபம்
ஈட்டுகின்ற வியாபாரம் நடக்குமென்றால்
ஏற்படுமா சமுதாயநேய மங்கே.
பொதுவரம்பு கொத்தியங்கே நிலச்சுரண்டல்
பொதுவரம்பில் பொள்ளலிட்டு நீர்ப்பாய்ச்சல்
முறையற்ற வழிகளிலே வடிச்சல் செய்தல்
வயலுக்குள் வழியிருந்தும் தடைகள் செய்தல்
இத்தகைய தில்லுமுல்லு விவசாயத்தில்
இருப்பவைகள் நற்சகுனம் ஆகிப்போமோ?

கடமைகளைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டு
உரிமைக்கு உரத்தொலிக்கும் உத்தியோகத்தன்

சமுகத்தின் நேயத்தைவளர்ப்பதற்கு
சற்றேனும் பங்களிப்புச் செய்யுவானா?

பகுத்தறிவு மனுக்குலம் செய்கின்ற தவறு
பற்பல கோளாறுகளை உண்டாக்கிவைக்க

காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள்,
காதிக் கோடுகள், இணக்கசபைகளெல்லாம்
தீர்க்கும் முயற்சியில் தோல்வியும் வெற்றியும்
தினமும் அடைவது நேயத்தைக் காட்டுமோ?

செய்யொண்ணா அடாத்துகளை செய்துவிட்டு
செல்வாக்கால், பெரும்பணத்தால் தடமழித்து
சமுகத்தில் முன்போல வந்துநின்றால்
சமுகத்து நேயங்கள் வளர்ந்துபோமோ?

பயிர் பச்சைசெய்பவர்கள் வயிறுபற்ற
பாதையிலே கால்நடைகள் வளர்ப்பவர்கள்
தினாந்தரமும் பால் தயிரில் முக்குளித்துச்
சிந்தனையற்றிருப்பதிலே நியாயமுண்டோ?

தர்மத்துக் காரியங்கள் செய்யுவோர்கள்
தம்பைகள் நிரப்புதற்கு கையசைத்தால்
சமுகத்தின் நேயங்கள் மலர்வதற்கு
தலைமுறைகள் சென்றாலும் சரிவராதே!

பொறுப்புக்கு மன்றாடி உதவி பெற்று
பொடுபோக்குத் தனத்தாலே காலம் நீட்டி
கொடுத்தவனின் பொறுப்போ முடியாமல் நின்று
குளறுவது அநியாயமன்றோ!

பக்கத்து வீட்டானுடன் வேலிச்சண்டை
பிள்ளைகள், நாய், பூனை, கோழிச்சண்டை
மழைபெய்தால் கூரை,பீலி தண்ணீர்ச்சண்டை

மற்றவர்க்கும் இவைகளினாற் பெரியதொல்லை
நட்புக்கு இவ்வாறுநாசம் வந்தால்
நேசமெங்கே, பாசமெங்கே முகத்தைக் காட்டும்?

பொதுநிதியில் கைபோட்டுத் துண்டெடுப்போர்
பேசலாமா சமுகத்தின் நேசம் பற்றி?
தன்குடும்பப் பசிபோக்க வழியில்லாமல்
தற்செயலாய் வாழைக்குலை களவெடுத்து
தோள்மீது அவ்வாழைக் குலையை ஏற்றி
சுற்றவைப்பார் குலம் வாழக் களவெடுப்போர்..
இத்தகைய இழிசெயல்கள் நடக்கும்போது
எப்படித்தான் சமுகத்தின் நேயமோங்கும்?

தாய்தந்தை பிள்ளைகள் தம்பி தங்கைக்குள்
தகராறு சொத்துக்கள் பற்றியெழும் சண்டை
ஆணிவேர் பொறுக்கஅதன் தாக்கம் சென்று
அடியறுந்து மரம் சாய்ந்து போவதுண்டு
சமுகநேயச் சீரழிவை அளப்பதற்கு
தக்கவொரு சான்றாக இது அமையும்.

இவைபோல சம்பவங்கள் தேடிப்பார்த்தால்
எத்தனையோ ஆயிரங்கள் வந்து சேரும்
அத்தனையும் சமுகத்தின் நேயத்திற்கு
அழிவு வழிகாட்டிகளாய்த் தானிருக்கும்
நேசத்தை விருத்திசெய்யும் வழிகளாக
நிச்சயித்த சிலவற்றைக் குறிப்பெடுப்போம்.

தொழில் செய்து வேதனங்கள் பெறுவோருக்கும்
தொழில் கொடுத்து வேலைகளைக் கொள்வோருக்கும்
இடையிலே முரண்பாடு இல்லையென்றால்
இருபாலும் சமுகத்தில் நேயமோங்கும்
அன்றாட வாழ்க்கையிலே நாங்கள் செய்யும்
அனைத்திற்கும் சுயநலத்தை விலக்கிவைப்போம்!
மனச்சாட்சிக்கு மாறுசெய்யா வண்ணம்

மனிதநேயத்தோடொழுகி நாம் நடப்போம்!
மற்றவரின் சொல் செயலை மதிப்பளிப்போம்!
மற்றவரை நம்மைப் போல் நேசம் வைப்போம்!
பிறர்க்குதவி செய்வதிலே இன்பம்கண்டு
பிறர்க்குதவும் மனப்பாங்கை வளர வைப்போம்!

எப்படித்தான் நமது பண்பு மாறினாலும்
இவ்வுலக இன்பங்கள் அதில் கலக்கும்.
உலகத்தில் நாமடையும் இன்பமெல்லாம்
உண்மையிலே சிற்றின்பம் என்று சொல்வர்.
இறைவனுக்காய் மண்ணளவு செய்தபோதும்
இதுவேதான் பேரின்பமாகு மென்பர்!

பேரின்பமடைவதற்கு விரும்புவோர்கள்
பூரணமாய் இறைவனுக்காய் வாழ வேண்டும்!
இறைவனது கட்டளைகள் பேண வேண்டும்!
இறைதூதர் வழிமுறையில் நடக்க வேண்டும்!
அவனுக்காய் அவன் நினைவில் வாழும் போது
அவன்மீது அச்சங்கள் அதிகரிக்கும்!
இறையச்சம் குடிகொள்ளும் மனித வாழ்வில்
எப்பிழையும் இலகுவிலே நடந்திடாது!
நடத்தைகள் பிழையின்றி நன்மையானால்
நம்சமூகம் அதனாலே நன்மை கொள்ளும்!
சமுதாயம் எங்களினால் நன்மை பெற்றால்
சமூகநேயம் எம்மாலே உருவாகும்!
நமது பெருமுயற்சியினால் நேசம் வந்தால்
சமூகநேசம் எங்களது சுவாசமாகும்!

இன்ஷாஅல்லாஹ் இன்னும் ஒரு கவி அரங்கம்-

**“சம்மாந்துறை எங்கள் தாயகம்!**
**சம்மாந்துறை எங்கள் தாயுமே!”**

என்னும் மகுடத்தில் இடம்பெறவுள்ளது.

சாமசிறீ
மஸூறா சுஹூறுத்தீன்

நேசம் என்பது
நினைவின் வேஷம்
வேஷம் புனைவது நடிகனின் பாஷை!

மண்ணில் நேசம் மலரில் நேசம்
பெண்ணில் நேசம் பணத்தில் நேசம்
அடுத்தவன் சொத்தில் நேசம்
அவன் ரகசியங்களில் நேசம்
கல்வியில் நேசம் கவிதையில் நேசம்
சொல்லில் நேசம் சுரண்டலில் நேசம்
இந்தநேசமே எமது மூச்சாய்
ஆகிப்போன நம் சமுகம்
சமுகமே சமுகத்தை நேசித்து
சாதனை புரியும்
வரம் வேண்டும் இறைவா!

சமுகநேசமே எமது சுவாசமாய்
சாதனை படைக்க
புறப்பட்ட கவிஞர்கள் இங்கே
சுவாசிக்கும் அற்புதம்
கவியரங்கென பெயர் பெற்றுள்ளது!

சமுகத் தளத்தில்
delete பண்ண வேண்டிய
சங்கதிகள் ஏராளம்!
அவைகளே கொடிபிடித்தால்
நம் கதிகள் தாராளம்!

முன்னொரு காலத்து ஓதப்பள்ளியில்
பொருள் புரியாமலே
நாங்கள் ஓதினோம்
அன்று ஒழுக்கச் சீர்கேடு
அங்கொன்று இங்கொன்றாய்
தலைகாட்டிப் போனது..!

இன்று ஓதப்பள்ளிகளில்
பொருள் புரிந்தும்
அஹதியாக்கள் மற்றும்
மார்க்கக் கல்வியின்
அத்தனை பரிமாணங்களும்
இன்று படித்தும்
இன்றைய இளைய சமுதாயம்
ஒழுக்கச் சீர்கேட்டில்
கொடிகட்டிப் பறப்பதென்ன?
மதிகெட்டு நடப்பதென்ன?

உடல் நிறைந்த ஆடைகளும்
முகம் மறைந்த படுதாக்களும்
தலைசுமக்கும் தொப்பிகளும்
அரங்கேறி யென்ன
உள்ளத்தில்
ஊற்றெடுக்க வில்லையே ஒழுக்கம்?
என்ன பயன் இதனால்?

மதம்மாறி களவொழுக்கம்
றணிங்றேஸ் என விடுகதைகள்
காசுக்காய் காவின்கள்
இத்தனையும் மலிந்தும்
ஒன்றையொன்று குற்றம் சாட்டி
ஈட்டியெனப் புறப்பட்ட
பலதரக் குழுக்களாலும்
சாதிக்க முடிவதென்ன?
சாதிக்கநினைப்பதென்ன?

செல்போன் கலாச்சாரம்
சீர்கெட்ட இளசுகள்
வயதுக்கு மீறிய
வம்புகள் ஏராளம்
சுவாசிக்காமல் உயிர் வாழ்ந்தாலும்
செல்போன் இல்லாமல்
உயிர்வாழ முடியாத
உணர்வோடு ஐக்கியமாகி
வாழ்வோடு போராடும்
வல்லமைகளை வளர்க்கும்
வக்கற்ற பரம்பரையாய்
ஆகிப்போன சமூகம் - இந்த
சமூகத்தின் நாளைய கதிஎன்ன?

வலைப்பின்னல்களில்
வாழ்க்கையைப் பின்னிக் கொண்டு
சிக்கெடுக்க முடியாமல்
சிக்கித் தவிக்கும்
சின்னஞ்சிறுசுகளின்
சீரற்ற கலாச்சாரம்
ஐயோபாவம் எதிர்காலம்!

என்னதான் படித்தாலும்
பண்பாடு வளராத
இரக்கம் உலவாத
உள்ளங்களால் என்ன பயன்?

காட்டிக் கொடுப்பு
கழுத்தறுப்புகள்
குழிபறித்தல் குத்துவெட்டு
நயவஞ்சகம் நன்றியின்மை
தட்டிப்பறிப்புகள்
தாளம் போடுதல்
கூஜாத்தூக்குதல் கொள்கை மாறுதல்

தாவுதல் பாய்தல் நெரித்தல்
என்றெல்லாம் எத்தனையோ
நாசமய்ப்போக வேண்டிய சங்கதிகள்
இன்றும் உயிர்வாழ்வதை
எண்ணிப் பார்த்ததுண்டா? - மனம்
வெம்பிப் போனதுண்டா?

விட்டுக்கொடுத்தல்
தட்டிக்கொடுத்தல்
பாராட்டுதல், கைகொடுத்தல்,
உதவி செய்தல்,
உபகாரம் செய்தல்
நன்றி காட்டுதல் என இன்னோரன்ன
வேண்டிய விசயங்கள்
மறைந்து போனதுநம் சமூகத்தில்
இதை எண்ணி
பெருமூச்சு விட்டதுண்டா
இதயம் நொந்ததுண்டா?

சமூகத்தை நேசிப்போம் -அதன்
வழிகேடுகளை தூக்கியெறிந்து
சமூகத்தை நேசிக்க
இனியேனும் நேசிப்போம!

சிந்திப்பது சிறந்தது
சிந்திக்க வைப்பது
அதனிலும் சிறந்தது!

எந்த விண்ணைமுட்டும்
இமயப் பிரச்சினையாயினும்
எண்ணம் தெளிக
எண்ணித் துணிக
எனவேண்டி விடைபெறுகிறேன்!

# கலாபூசணம் சம்மாந்துறை ஏ.அஸீஸ்

வந்திருக்கும் அனைவருக்கும்
வளமான நல் வாழ்த்துக்கள்
அஸ்ஸலாமு அலைக்கும்
வரஹ்மதுல்லாஹி வபறகாதுஹு"

எத்துறையானாலும்
எங்கள் துறை சம்மாந்துறை
அத்தனை துறைகளிலும்
அயராத உழைப்பிருக்கும்
எங்கள் சம்மாந்துறையில்.

சேறோடு சுரி புரண்டு
செய்வன அனைத்துஞ் செய்து
வேர் களை நீக்கி உச்சி
வெயிலிடை உலர்ந்து வாடி
நேர் நிரை நட்டு நல்ல
நில உரப்பசளையிட்டு
சீருடன் செந்நெல் செய்யும்
சிறப்பான தேசம் எங்கள்
சம்மாந்துறை தேசம்.

கத்தரிக் காய்க்கும்
கறி வேப்பிலைக்கும்
செத்தல் மிளகாய்க்கும்
சீனிக்கும் பாலுக்கும் மீனுக்கும்
பெத்தாச்சி போல
பெருவயதாகி நித்தமும் நமது
நெஞ்சைப் பிளிகையிலே
அடுப்பங்கரையெங்கும்
அல்லோல கல்லோலம்

துடுப்பில்லா தோணிகள் போலே
துணைகள் தவிக்கையிலே
இடுப்பொடிய பாடுபட்டும்
எம் வாழ்வில் மகிழ்விலையே
என்றேங்கும் தோழர்காள்.

அத்தனையும் விட்டுவிட்டு
அயராது கவிதை கேட்டிட
வந்திருக்கும் அனைவரும்
சமுக நேசம் உள்ளவர்கள்
கவிதை நேசம் உள்ளவர்கள்!
எங்கள் சுவாசங்கள்
சில்லறைக் கடையின்
சிக்கலுக்குள் சீர் கவிதை பதப்படுத்தி
அரும் பொருளாய் அளிப்பதுவும் - ஓர்
சமுக நேசம் தான்!
எங்கள் சுவாசம் தான்!

பத்திரிகை வானொலிக்கு
எழுத ஆரம்பித்த காலமது
'சம்மாந்துறை அஸீஸ்' என்று
பெயரையும் வைத்துக் கொண்டேன்
என் வாப்பாவும் பத்திரிகை
படிப்பவர் என்னடா நீ
இந்தப் பெயரில் எழுதுகின்றாய்
சம்மாந்துறை உனக்கு
பெற்றெடுத்த வாப்பாவா
என்று ஏசினார்.
நான் பேசவில்லை தலை குனிந்தேன்
ஓர் நாள் இலங்கை வானொலி
முஸ்லிம் நிகழ்ச்சிக்கு கடிதம் வந்தது
சந்தோசப்பட்டார்.
சம்மாந்துறை சமுக நேசம்
எங்கள் சுவாசமானது.

பீடி, சிகரட், சுருட்டு
போயிலை, மூக்குத்தூள்

லேகியம், பாகிஸ்தான் பாக்கு
விற்பனையில் இருந்த காலம்
எங்கள் மகளில் ஒருத்தி சொன்னாள்
இத்தனையும் விற்றால்
எவ்வளவு ஆதாயம் வரும் வாப்பா
அத்தனையும் நான் தருவேன்
என் சம்பளத்தில்
விட்டுவிடுங்கள் இந்த
வியாபாரத்தை என்றுரைத்தாள்.
அத்தனையும் விற்பதில்லை
அன்றில் இருந்து...
எங்கள் சுவாசம்
சமுக நேசமானதுவே!

அறுவடை சீசன் காலம்
பொட்டி பொட்டியாய்
செந்நெல் மூடைகள்
ஏறி இறங்கும்
மூட்டை சுமப்பவர்கள்
வேலை முடிந்த பின்னர்
கடையில் சாமான்கள்
வாங்குவார்கள்.

ஓர் கிழமை, ஈர் கிழமை
உழைப்பு முடிந்துவிடும்
கடை வைத்த பாக்கி
கரைசேராமல் இருக்கும்
கேட்டுப் போனால்
அடுத்த சீசன் வரும் காக்கா
தருவோம் என்பார்கள்
சடஷ்டைப்பையில் இருப்பதையும்
தாருங்கள் காக்கா என்பார்கள் - இங்கு
சமுக நேசம்
எங்கள் சுவாசமானதுவே!

வருடத்திற்கு இரண்டு பெருநாள்
வந்தே தீரும் எங்களுக்கு
பெருநாளைக் கொண்டாட வேண்டும்
உறவினர்களைச் சந்திக்க வேண்டும்
என்ற கற்பனை ஊறிக்கிடக்கும்
அண்டைக்கு சாமான் வாங்க
அனேகர் இருப்பார்.

கடையோடு வீடு இருப்பதால்
சாமான் கேட்டு கஸ்டப்படுத்துவார்
அடிக்கடி வந்து அவதிப்படுத்துவார்
என்ன செய்ய –நாளை
கை நீட்டி காசு வாங்க இருப்பதால்
பொருட்கள் இல்லையென்று கூறலாகாது
எங்களுக்கு பெருநாள்
இல்லையன்று
சமுக நேசம்
எங்கள் சுவாசமானது!

பரிகாரி வீட்டுக்கு
மகளுக்கு மருந்தெடுக்க
உம்மாவும் மகளும் வருவார்கள்
மருந்து வாங்கிய பின்
சுக்கு, நச்சீரகம், பனங்கற்கண்டு
திப்பிலி, ஓமம் கூட்டுச் சேர்த்து
மருந்து குடிக்க வேண்டும்
என்ன விலை விற்றாலும்
பரவாயில்லை எனக்கு
இருபது ரூபாவுக்கு எல்லாம் வேண்டுமென்பார் உம்மா
ஆயிரம் ரூபாய் கொடுத்து என்றாலும்
ஆங்கில மருந்து வாங்குவார்கள்
முடியுமானதை கொடுப்பது
எங்கள் கடமை இது
சமுக நேசம் எங்கள் சுவாசம்!

சின்னப் பிள்ளைகள் மூன்று பேர்
இனிப்பு வாங்க
சேர்ந்தே வருவார்கள்
ஐந்து ரூபாய் நாணயம் இருக்கும்
மூன்று ஐஸ்பழம் கேட்பார்கள்
ஒரு ரூபாய் நட்டம் வரும்
இல்லையென்று கூறினால்
பிள்ளைகளுக்கு ஏக்கம் வரும்
என்னதான் செய்வது
கொடுக்கத்தான் வேண்டும்
எங்கள் சுவாசம்
சமுக நேசமானது!

மக்களின் குறைகள் தீர்க்க
அரசினால்
நடமாடும் சேவைகள்
பிரதேச செயலகமூடாக நடக்கும்
இருபதுக்கு மேற்பட்ட சேவைகள்
இனிதே நடந்து முடியும்
அடையாள அட்டைகள்
எடுத்தல் புதுப்பித்தல்
காணாமல் போனதை கண்டுபிடித்தல்
இத்தனைக்கும் முத்திரை வேண்டும்
அங்கே முத்திரைகள் இருக்காது
ஆலாய்ப் பறப்பார்கள் மக்கள்
ஞாயிற்றுக் கிழமை ஆனதால் தபால் விடுமுறை
முத்திரை உள்ள இடத்தை
ஏற்படுத்தி
மக்களுக்கு சேவை செய்தால்
சமுக நேசம்
எங்கள் சுவாசமாகுமல்லவா?

# கவிஞர்
# எஸ்.எல்.எம். இஸ்மாயில்

தான்வாழ் சமூகத்துக்கெனத்
தன்னால் ஆனதெல்லாம்
தந்து மகிழ்தல்
சமூக நேச சுவாசமாகும்.

நாம் வாழ் தாய்
நீர் வளம், நில வளம்
மனவள மனித வளம்
பண வள மென, இன்னும்
பல வளம் நிறை பெறு
சம்மாந் துறை யூரில்
பிறப் பெடுத்த நாம்
கொடுத்து வைத்தவர்கள்.

இத்தனை வளம் நிறை
எம் சம்மாந் துறையூரில்
அரசியல் வறுமை,
உய ரதிகாரிகள் வறுமை,
தொழில் நிபுணங்கள் வறுமை
தக்வா, தௌஹீதில் வறுமை
என் றெல்லாம் வறுமையாகி,
வெறுமையாகிப் போனோம்
வள முயர் சம்மாந் துறை
மக்கள் நாங்கள்.

வள முறு துறை மிகு
ஊரிதனை
பெறு மதி மிகு

தொழில் தரு துறை யென
மறு உரு பெறு வென ஒவ்
ஒரு தரு மன தொடு
உழைத்திட வேண்டும்!

ஆளுக் காளாப்படித்தல்
அடார் பண்ணல் குழி பறித்தல்
காய் வெட்ட லெல்லாம்
கருணை கொண்டு
கைவிட வேண்டும்!

இன்றெமக்கில்லை மழை
என்ற தெல்லாம்
இன்னு மெமக்கு ளில்லை
நல்ல சமுக நலம்
என்பது தா னுண்மை!

தச்சர் கொத்தர்
அரச உத்தி யோகத்தர்
விவசாயி, வியாபாரி
கூலித் தொழிலாளி யெல்லாம்
தம்மா லான தெல்லாம்
தனியாக நின்று தானே
மாய் கின்றோம்.

ஓதியோர் படித்தோர்
உயர் பதவி பெற்றோர்
துறை திறன்
மிக்கோ ரெல்லாம் ஊர்ப்
பொது மன்றென் றொன்று
தேடிட வேண்டும்!

அங்கே
உற்ற குறை நிறை
உணர்ந்து

உரிய வழி
கண்டிட வேண்டும்!
மற்றும்
மாத மொரு முறையாவது கூடி
மறு முனைப்புகளதில்
முனைந்திட வேண்டும்!

தீயஞ்சும் வெஞ்சொல் லுரைத்து
திசை கெட்டலைந் துழலும்
நல்லிசைவு கெட்ட சில பேர்க்கு
புது விசை யூட்டி வழிகாட்டிட
நன்னெறி கொண்டோர் சமுக
நலம் பூண்டோ ரெல்லாம்
ஒன்றாயிணைந்தே உயர்
திட்டம் தீட்டிட வேண்டும்!

இயன்றவ னியலாதவனை யிழிவுறுத்தி
இஸ்லாம் சொன்ன இனிய
நெறி யனைத்து மறந்து
மாணவர் மது போதையும்
மறியோடு கடா உடனான
காளையர் நிலையுமாகி
உல கழி நிலை
நினைத்து திணைத்து
வருந்து கின்றேன்.

உள்ளம் துடிக்கிறது
உணர் வெல்லாம் கொதிக்கிறது
எம் மிளம் சமூகம்
சா குழி நோக்கிப்
போகிறதால்!

இனியவரே! என்னவரே!
மாண் புயர் மக்கள் நாங்கள்
இனியாலு மின்னிலை மாற்றி மாற்றி

என்றுமே நன்னிலை நாட்டி நாட்டி
நன்றே நாம் சேர்ந்
துழைத்திட வேண்டும்
இந்த செகத்தை நாமே
வென்றிட வேண்டும்!

சர்க்கரைத் தேனொத்த உறவுமுறை
ஊறி யூறி
சர்ப்ப நிகர் நட்பு நிலை
மாறி மாறி
சாதியினப் பிரிவு நிலை
ஓடி யோடி
மானிடர் நேய நிலை
தேறித் தேறி
முழு மதி நிக ரொளி
இக மலர் முக மதில்
ஏறி யேறி
சுக மது பெற நாமின்றே
சேர்ந் துழைத்திட வேண்டும்!

சில பேர் ஸக்காத்து வழங்க
பல பே ரின்னு மேழைப்
பங் குண் டேப்பமிட்டுத்
தொப்பை தொடை வரை தொங்க
மெத்தையி லுறங்கு நிலைத்
துரைமார்
எங்க ளேழைப் பங்கின்றே
பகிர்ந் துண்ண இரங்கியே
உடனிதை வழங்கிட வேண்டும்!

இரவு பகலறியா துழைக்கு மக்கள்
ஏழ்மை யழித் தொழித் துயர்
மெத்தைப் படுக்கையு மேலோ
ருடுக்கையும்
சுகானு போவச் சுற்றத்தார்

குலவலு முயலலும் கொண்டிங்கு
வாழ்ந்திட வேண்டும்!
அது கண்டு நான்
மகிழ்ந்திட வேண்டும்!

நாகரீக மெனக் கருதி
நாயிலும் கேடான நடைமுறை
நாடியின்னும் பல பேர்
ஓடியே செல்கின்றார்
நபி நாயக மவர்கள் காட்டிய
நல் வழி மீறியே போகின்றார்!

வேண்டாத செய லெல்லாம்
கூண்டிலே போட்டுக்
குழியிலே புதைத் திடுவோம்
கூடி நின் றிதனை நாம்
இன்றே ஜெயித்திடுவோம்!

எங்கு? என்ன? தேவையென்று
தேடி யோடி உதவி
செய்திட வேண்டும்!
உதவி நாடி நிற்போர்
வீடு தேடி விரைந்தே உதவ
இயக்க மொன்று உடன் இன்றே
சமைத்திட வேண்டும்!
அதில் அங்கமாய் நானும்
சேர்ந்திட வேண்டும்!

சொன்ன சொன்ன
துறையி லெல்லாம்
சொர்க்கம் செய்யும்
சிற்பிகள் நீங்கள்
என்று மொன்றாய்
இணைந்தே நின்று
எதிலும் வெற்றி
கண்டிட வேண்டும்!

சமுகம் சமுக மென்று
பணிகள் புரிவோர் தனைப்
போற்றிட வேண்டும்!
அன்னவர் மார்பில்
அணியார மணிந்தே
அலங்கார சிம்மாசன மேற்றி
நாம் மகிழ்ந்திட வேண்டும்!

எதிர்கால சந்ததிக்கென்று
இப்படியும் நாம் செய்திடுவோம்!
நீரும், நிலமும்,
வானும், இயற்கை வளமும்
காடு, கடலும், காற்றும்
காத்துக் கொடுத்த லெங்கள்
கடனே யென்று மனதில்
திடம் கொண்டிடுவோம்!

பல கலை சுவை தலை
பல இணைந்து
இன்னும் சில பெரு
மனங்களும் சேர்ந்து
நடத்து மிந்த கவியரங்கும்
சமுக நேச மென்ற
சுவாசம்தான்!

உலக உருண்டையை
உசுப்பிக் காட்டிய
மனித மாணிக்கம்
உலகு புகழ்
உத்தம சீலர்
இஸ்லாமியக் குடியரசமைத்த
இமாம் கொமெய்னி
தக்கதோர் எடுத்துக்காட்டு
சமூக நேசத்திற்கு சுவாசத்திற்கு!

தங்கத் தாத்தா
காந்தி மகாத்மா
இன்னும் எம்முள்
இருப்பதுவும்
இன்று உலகம்
ரசிப்பதுவும்
சமூக நேசம்
எந்தன் சுவாசம்
என்றே வாழ்ந்தார்
என்பத னால்தான்!

இணைந்து வாழ் குழுவிற்கு
துணிந்து துணை நிற்பவனே
சிறந்த மனித னென்ற
உயர்ந்த தத்தவத்தை
அன்றே சொன்னான்
அறிஸ் டோட்டில்
அதிலும் சமூக நேசம்
சுவாசிக்கப் படுகிறது!

ஏழைச் சுரண்டலுக்
கெதிர் நின்ற தோழன்
கார்ல் மார்க்ஸை
இன்றும் உலகம்
இனிதே பேசு தென்றால்
இன்ப சமூக நேசம்
இவரும் கொண்டதனால் தானே!

நல்வழி காட்டிட அல்லாஹ்
நபியும் றஸுலும் தந்தும் கூட
சமூக நேசம் கொண்டது அல்லோ!

அன்றே எங்கள்
நபிகள் திலகம்

நன்றே நவின்றார்கள்
''மல்லம் யஹ்தம்ம பிஅம்றில்
முஸ்லிமீன பலைச மின்னா''
(அலி மு.ஃ.ஜம். இமாம் பைஹகி)

''சமுக நேச மில்லாதோன்
இல்லை என் சமுகத்தைச்
சார்ந்து'' என்று
இங்கும் எங்கள்
நபிகள் நாதரின்
நேசமிகு சமுக சுவாசம்
பேசப் பட்டிருக்கிறது!

அண்ணல் நபிகளார்
சொன்னா ரின்னும்
''அஸ்ஸாயி அலல் அர்மிலதி
வல் மிஸ்கீனி கல் முஜாஹிதி
பீ சபீலில்லாஹ்'' (புஹாரி)

விதவைக்கு மேழைக்கும்
உழைப்பவன்
நோன் பிருந்து, நிசி முழுதும்
நின்று வணங்கு வதற்கும்
ஜிஹாது செய்வதற்கும்
ஒப்பாவான் என்று
அப்பப்பா
எப்படிச் சிறப்பிந்த
சமுக நேசமப்பா!

அத்தனையு மிகைத்தோன்
அல்லாஹ்வே பேசுகின்றான்
சமுக நேச சுவாசம் பற்றி:
''பலக் தஹமல் அகபா.
வமா அத்றாக மல் அகபா
பக்கு றகபதின். அவ் இத் ஆமுன்

பீ யவ்:மின் தீமஸ் அபதின்
யதீமன் தா மக்றபா'' (சூறா பலத் 11-16)

''நரகில் கணவா யென்னும்
தடை தாண்ட, அல்லாஹ்
கற்றுத் தரும் வித்தை
கேளுங்கள்!
விடு வித்தல் வேண்டும்
அடிமைகளை.
பசி தீர்த்திடல் வேண்டும்
ஏழைகளை.
ஆதரித்தல் வேண்டும்
அனாதைகளை.
சாஹ்!
என்னே சமூக நேசம்!
எத்தனை சமூக சுவாசம்!
அல்லாஹ்வின் அழகிய வாசகங்களில்..

என் சமுகமே!
காது குளிரக் குளிரக் கவிதை
கேட்டுக் கேட்டு
களைத்துப் போனோம்.
கூடாது
உடைப்பெடுக்க வேண்டும்
எமதுணர்வுகள்!
சுய நல முழுதும்
சுற்றி யெறிந்து
உட லெங்கும்
சமுக சூடேறி
சுவாசம் கொதி கொண்டு
வியர்த் தெழுந்திட வேண்டும்!
உயிர்த் தெழுந்திட
எங்கள் சமுகம்!

சமுக நோக்கும்
சமயப் போக்கும்
அடி நாத மென்றே இன்றே
முடிவெடுப்போம்!

சமுக நேச மெங்கள் சுவாசம்
சமுக நேச மெங்கள் சுவாசம்
என்ற தேச விமோசன
கோச மெங்கும்
ஒலித்திட வேண்டும்
எங்கள் சமுகம்
மிக நன்றே
ஜொலித்திட வேண்டும்!

---


படர்க்கைகள் இணையம் நடாத்திய இவ்வருட
மீலாத் கவி அரங்க தொகுப்பு நூல்:

**படர்க்கைகளின்**

**கவியரங்கக் கவிதைகள்**

**பாலைவனத்தில் ஓர் பசுமை ஊற்று**

***14-02-2014.***



# நன்றிகள் ஆயிரம் உங்களுக்கு!

*"கண் விழித்ததுமே*
*தன் சமூகத்தைச் சிந்திக்காதவன்*
*என் னைச்சார்ந்தவ னல்லன்"*
*என் றாரெம் அண்ணல்நபி.*

*"புண்ணிய யுத்தம்*
*புரிந்திடும் வாளைவிட*
*மண்ணுலகில் எழுத்தாளர்*
*பேனை சிறந்ததுவே"*
*இன்னுமே சொன்னார் அண்ணலார்.*

*ஆக-*
*சமூக நேசம் இஸ்லாமியக் கடமை.*
*சமூகத்திற்காய் எழுதுதலும் கூடவே!*

*சமூகத்தை நேசிக்காத மனசும்*
*சமூகத்திற்காய் எழுதாத பேனையும் தூசே!*

*"கொடுத்தால் குறையும் சொத்து*
*கொடுத்தால் இன்னும் விளையும் அறிவெனும் முத்து!*
*அறிவைப் பகிர்தல் அவரவர் கடமை!*
*அதனைப் பெறுவது சமூகத்தின் உரிமை!"*
*நவின்றார் அமீருல் மு·மினீன் அலி.*

*இலக்கியத்திற்காய், மொழிக்காய்,*
*காசுக்காய், கட்சிக்காய் என எழுதும் 'கன'வான்களும்....*
*மாலைமரியாதைக்காய், புகழுக்காய், பெருமைக்காய்*
*மாயஜாலம் காட்டும் நேரமில்லாப் 'புனி'தர்களும்*
*மலிந்து விட்ட இம்மண்ணில் மீண்டும் ஒரு*
*மானுடநேச மனங்களின் ஒன்றுகூடல் இன்று....*
*மனம் மகிழ்கின்றது. பூரிக்கின்றது.*

*நன்றிகள் ஆயிரம் உங்களுக்கு!*
*நாளையும் இந்நாள் போலமையட்டும்!*
*நாயனிடம் வேண்டுகின்றோம்... ஆமீன்*

**- எம்.ஐ.பி.பௌஸுதீன்**

# Fous Electrical & Hardware

## தைக்கா சந்தி, மெயின் வீதி, சம்மாந்துறை















கட்டிடப் பொருட்கள்,
மின் இணைப்பு சாதனங்கள்,
பெயின்ட் வகைகள்,
நீர் இணைப்புக் குழாய்கள்,
மற்றும் கருவிகள், உபகரணங்கள்
என்பவற்றை
தரமாகவும், மலிவாகவும்
பெற்றுக் கொள்ள
நாடுங்கள்:

## பௌஸ் எலெக்ரிகல் & ஹார்ட்வெயார்

---






உங்களின் கனவு இல்லத்தைக்
கட்டிக் கொள்ள-
வீட்டு வரைபடம் வரைய-
செலவின மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்க-

## Fous Constructions

தொடர்புகள்: **0772392163**